மினி டைடல் பூங்காக்களால் - படித்த இளைஞர்களுக்கு மட்டுமின்றி

# அனைத்து மக்களுக்கும் மறைமுக வேலை வாய்ப்புகள்!

## முதல்வரைப் பாராட்டி ‘தினகரன்’ நாளேடு புகழாரம்!

சென்னை, டிச. 31–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள மினி டைடல் பூங்காக்களால் படித்த இளைஞர்களுக்கு மட்டுமின்றி அதைச் சுற்றியுள்ள அனைத்து மக்களுக்கும் மறைமுக வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:–

தூத்துக்குடியில் நேற்று தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட ரூ.32 கோடியே 50 லட்சம் செலவிலான தூத்துக்குடி மினி டைடல் பார்க் இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இப்பூங்காவானது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி தருவது மட்டுமின்றி, தடையற்ற மின் வசதி, வாகனங்கள் நிறுத்துமிடம், உணவுக்கூடங்கள், உடற்பயிற்சி கூடம், கலையரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை கொண்டதாகும். 63 ஆயிரம் சதுர அடியில் 4 தளங்களுடன் பிரமாண்டமாக காட்சியளிக்கிறது.

எல்லோருக்கும் எல்லாமுமாய் என்கிற கோட்பாட்டில் உறுதியாக நிற்கிற திராவிட மாடல் அரசு, சென்னையை தவிர பிற மாவட்டங்களில் நவீன தொழில்நுட்ப புரட்சியை முன்னெடுத்து வருகிறது. அதன் அடிப்படையிலே தூத்துக்குடி, சேலம், தஞ்சாவூர் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் மினி டைட்டல் பார்க் திட்டத்திற்கு கடந்த 2023ம் ஆண்டு மே மாதம் அடிக்கல் நாட்டப்பட்டு, இப்போது தூத்துக்குடியில் அந்த திட்டம் முழுமை பெற்றுள்ளது. ஏற்கனவே தமிழகத்தின் முதல் மினி டைடல் பூங்கா விழுப்புரத்தில் திறப்பு விழா கண்டது. அதை தொடர்ந்து மற்ற மாவட்டங்களிலும் டைட்டல் பூங்காக்கள் திறக்கப்பட்டு வருகின்றன. இப்பூங்காக்கள் தகவல் தொழில்நுட்ப சூழலை மேம்படுத்துவதோடு, சமூக பொருளாதார வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்ற உள்ளன.

தமிழகம் இன்று இந்தளவுக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி பெற்றுள்ளதற்கு முன்னாள் முதல்வர் கலைஞர் தான் காரணம் என்றால் மிகையாகாது. கடந்த 1996ம் ஆண்டு முதல் 2001 வரையிலான திமுக ஆட்சிக்காலம் தகவல் தொழில்நுட்ப வரலாற்றில் ஒரு பொற்காலம் எனலாம். எம்பவர் ஐடி என்ற நிகழ்வை ஆண்டுதோறும் நடத்தி, தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் கிராமங்கள் வரை அப்போது எடுத்துச் செல்லப்பட்டது. எதிர்கால இளைஞர்களின் நலன் கருதி அப்போதே தகவல் தொழில்நுட்பத்துறைக்கு தனி துறை உருவாக்கப்பட்டு, அதற்கு அமைச்சரும் நியமிக்கப்பட்டார். இந்தியாவின் முதல் தகவல் தொழில்நுட்ப பூங்கா சென்னையில் உருவாகிட கலைஞரே காரணமாக இருந்தார்.

தமிழகத்தின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை முன்மாதிரியாக கொண்டே பின்னாளில், ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு ஹைதராபாத்தை ஐடி நகரமாக மாற்ற நடவடிக்கை மேற்கொண்டார். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை மாநகரத்திற்கு ஐடி நிறுவனங்கள் வரிசையாக படையெடுத்த நிலையில், அவற்றை மாவட்டங்களுக்கு மடை மாற்றிடும் திட்டங்களும் திமுக அரசால் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில் நாங்குநேரி தொழில்நுட்ப பூங்கா, கங்கை கொண்டான் சிப்காட் ஐடி பார்க் உள்ளிட்ட சிலவற்றை தென்மாவட்டங்களில் உதாரணமாக காட்டலாம்.

கலைஞரின் கனவுகளை நிறைவேற்றி வரும் இந்த திராவிட மாடல் அரசும், அவரது வழியில் நவீன தொழில்நுட்ப புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. தென்மாவட்டங்களில் உள்ள பல இளைஞர்கள் வேலைவாய்ப்புகளுக்காக சென்னைக்கு படையெடுப்பதை தடுக்க, அந்தந்த மாவட்டங்களிலேயே ஐடி பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டு


தினகரன்
டிசம்பர் 30, 2024 திங்கட்கிழமை
நவீன தொழில் புரட்சி
தூத்துக்குடியில் நேற்று தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட ரூ.32 கோடியே 50 லட்சம் செலவிலான தூத்துக்குடி மினி டைட்டல் பார்க் இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இப்பூங்காவானது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி தருவது மட்டுமின்றி, தடையற்ற மின் வசதி, வாகனங்கள் நிறுத்துமிடம், உணவுக்கூடங்கள், உடற்பயிற்சி கூடம், கலையரங்கம், உள்ளிட்ட பல்வேறு வசதிகளை கொண்டதாகும். 63 ஆயிரம் சதுர அடியில் 4 தளங்களுடன் பிரமாண்டமாக காட்சியளிக்கிறது.
எல்லோருக்கும் எல்லாமுமாய் என்கிற

வருகின்றன. அந்த வகையில் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் இப்போது டைடல் பூங்காக்கள் வேலை வாய்ப்பை உள்ளூரிலே பெற்றிட வழி கோலும். தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் நகரங்களான திருச்சி, மதுரை, சேலம் உள்ளிட்ட நகரங்களும் தகவல் தொழில்நுட்பம் அடிப்படையில் வளர்ச்சியை எட்டி வருகின்றன. இத்தகைய மினி டைடல் பூங்காக்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை மட்டுமின்றி, அதை சுற்றியுள்ள மக்களுக்கும் மறைமுக வேலைாய்ப்புகளை உருவாக்கி தரும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ‘நீர் நிலைகளை காப்போம்’ ‘மரக்கன்றுகளை நட்டு வளர்ப்போம்’ என்ற விழிப்புணர்வு மாபெரும் மாரத்தான் போட்டி காஞ்சி வடக்கு மாவட்ட திமுக சுற்றுச்சூழல் சார்பாக ஆதம்பாக்கம் கே ஆர் ஜெ கார்டன் எம்.ஆர்.டி.எஸ்.மெயின் ரோட்டில் சிறப்பாக நடைபெற்றது. காஞ்சி வடக்கு மாவட்ட திமுக சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் கே.ஆர். ஆனந்தன் தலைமை தாங்கி மாரத்தான் போட்டியை ஏற்பாடு செய்திருந்தார். மாரத்தான் போட்டியை காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா. மோ,. அன்பரசன் கலந்துகொண்டு துவக்கி வைத்து பரிசு வழங்கினார். உடன் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாநில சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளர் சாய் ஜெயகாந்த் பாரதி, 165வது வட்ட செயலாளர் கே.ஆர்.ஜெகதீஸ்வரன், வேலவன் பூங்கொடி ஜெகதீஸ்வரன் எம்.சி., இரா பாஸ்கரன், பேராசிரியர் பிரபு, காஞ்சி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் ப. பிரசாத், ஆ.இராஜன், வாசிம் ராஜா, பெருமாள், குதி செயலாளர்கள் திருநீர்மலை ஜெயக்குமார், , வே.கருணாநிதி மற்றும் இரா.இரத்தின குமார்,ராமசந்திரன், விக்னேஸ்வரன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் மற்றும் கழக முன்னோடிகள் கழக உடன்பிறப்புகள் தன்னார்வலர்கள் பொதுமக்கள் போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

கேரள மாநிலம் - புனலூர் தொகுதி - அம்பநாடு எஸ்டேட் முதல்

# தென்காசி வரை அரசுப் பேருந்துகள்: அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைக்கிறார்!

## மாநில அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

கொல்லம், டிச. 31-

கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதி அம்பநாடு எஸ்டேட் முதல் தென்காசி வரை தமிழக அரசு சார்பில் பேருந்துகள் இயக்கம் அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைக்கிறார் என மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அது வருமாறு:

கேரள மாநிலம் முழுவதும் பல மாவட்டங்களிலும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் குறிப்பாக தமிழ் மக்கள் அதிகம் வாழும் மாவட்டங்களில் கொல்லம் மாவட்டம் ஒன்றாகும். குறிப்பாக கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதியில் அம்பநாடு, ஆரியநாடு, ஆரியங்காவு என்று பனிரெண்டு எஸ்டேட் உள்ளது. இந்த எஸ்டேட்டுகளில் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதியை பூர்வமாக கொண்ட இலங்கையில் இருந்து வந்து குடியேறிய தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் சுமார் முப்பத்தி ஐந்து சதவீதம் பேர் தமிழர்கள் வாழ்ந்து வரும் தொகுதியாக புனலூர் விளங்கி வருகிறது இந்த தமிழக மக்கள் அனைவரும் தமிழக முதல்வர் தலைவர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு தமிழக முதல்வர் அவர்களை கொண்டாடி வருகின்றனர்.

அண்மையில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கேரள மாநில திமுக சார்பில் ஆரியங்காவு பகுதியில் பிறந்தநாள் விழா கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாபன் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

அந்த நிகழ்ச்சியில் கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர். முருகேசன், தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாபன் ஆகியோரிடம் அம்பநாடு, ஆரியநாடு உள்ளிட்ட பனிரெண்டு எஸ்டேட்டில் வாழும் தமிழ் மக்கள் தங்களுக்கு அம்பநாடு எஸ்டேட் முதல் தென்காசி வரை பேருந்து வசதி செய்து கொடுத்தால் நாங்கள் அனைவரும் எங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களும் வாங்கி வருவதற்கு வசதியாக இருக்கும் என்று கோரிக்கை விடுத்தார்கள்.

இந்த கோரிக்கை மனு தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கரிடம் கேரள மாநில திமுக அமைப்பாளரும் தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளரும் நேரில் சென்று அளித்தோம். இந்த கோரிக்கையை ஏற்று உடனடியாக அம்பநாடு முதல் தென்காசி வரை தமிழக அரசு சார்பில் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுத்து உத்தரவு பிறப்பித்தார்கள்.

இதன் துவக்க விழா கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதி அம்பநாடு எஸ்டேட்டில் வரும் 2.1.2025 வியாழக்கிழமை மாலை 5மணியளவில் கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாபன் முன்னிலையில் தமிழக அரசின் போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடி அசைத்து துவங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் கேரள மாநில திமுக இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர் விபின் முருகேசன், ஹரிகுமார் மற்றும் சிற்றார் ரவிச்சந்திரன், துரை பேச்சிமுத்து, மாவட்ட கழக செயலாளர்கள் ரெஜிராஜ்,மாம்பழத்துறை சலீம் ஸ்டீபன்,ஆதவன், சதாசிவம், ஷாலினி, அஜ்மல், ராஜேஷ், ஷாம் லால்,லால்ஜி, கீதா,அச்சு பிலால், நெவின், பிரின்ஸிஅன்னா மற்றும் அனைத்து அணி களைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர் இந்த நிகழ்ச்சியில் கேரள மாநிலம் முழுவதும் உள்ள கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கேரள மாநில திமுக அமைப்பாளர் கே. ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

உள்நாட்டு வளர்ச்சி விகிதம் எந்த நாட்டில் அதிகரிக்கிறதோ அங்குதான் நல்லாட்சி நடைபெறுவதாக அர்த்தம்!

# மோடி ஆட்சியில் வீழ்ச்சி விகிதமே அதிகரிப்பு!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் குமுறல்!

சென்னை, டிச. 31-

மோடி தலைமையிலான ஒன்றிய அரசு உள்நாட்டு வளர்ச்சி விகிதத்தில் தோல்வி அடைந்து விட்டது. மோடி கூறிய விதத்தில் உள்நாட்டு வளர்ச்சி விகிதம் எந்த நாட்டில் அதிகரிக்கிறதோ அங்குதான் நல்லாட்சி நடைபெறுகிறது. என்று அர்த்தம் என்று கூறினார். ஆனால் மோடி ஆட்சியில் வீழ்ச்சி விகிதமே அதிகரித்துள்ளது. இதற்கு மோடி என்ன கூறப் போகிறார் என ‘தீக்கதிர்’ நாளேடு கேள்வி எழுப்பியுள்ளது.

இது குறித்து தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. கூட்டணி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்துள்ளதோடு, கட்டுக்கடங்காத விலைவாசி உயர்வால் மக்களின் வாழ்க்கை நிலை மோசமாக பாதிக்கப் பட்டுள்ளது. 2024-25 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் மொத்த உள் நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி விகிதம் 6.7 சதவீதமாக குறைந்துள்ளது. இந்த புள்ளி விவரம் கூட உண்மையான பொரு ளாதார நிலையை பிரதிபலிக்கவில்லை.

உணவுப் பொருட்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. பருப்பு வகைகள், காய்கறி கள், பால் பொருட்கள் என அத்தியாவசிய பொருட்களின் விலை கட்டுக்கடங்காமல் உயர்ந்துள்ளது. ஏழை, நடுத்தர மக்களின் வாங்கும் சக்தி வெகுவாக குறைந்து ள்ளது. ரிசர்வ் வங்கியின் வட்டி விகித உயர்வால் வீட்டுக்கடன், வாகனக்கடன் போன்றவை அதிகரித்து சாமானிய மக்களின் வாழ்க்கைச் செலவு பன் மடங்கு உயர்ந்துள்ளது.

நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவ ரங்களின்படி 2023-24 முதல் அரையாண்டில் ஜிடிபி வளர்ச்சி 8.1சதவீதம் என்று கூறப்பட்டாலும், இது தேர்தல் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசின் செல வினங்களால் ஏற்பட்ட தற்காலிக உயர்வே ஆகும்.

உண்மையில் தனியார் துறை முதலீடுகள் வெகுவாக குறைந்துள்ளன. வேலையின்மை உச்சத்தில் உள்ளது. விவசாய துறையில் வளர்ச்சி இல்லை. சிறு, குறு தொழில்கள் பெருமளவில் மூடப்பட்


தீக்கதிர்
2024 டிச.30 திங்கட்கிழமை
பணவீக்கம் உயர்வும் மக்கள் வாழ்வின் வீழ்ச்சியும்!

டுள்ளன. கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபம் மட்டுமே உயர்ந்துள்ளது. பங்குச் சந்தை யின் உயர்வு பொய்யான பொருளாதார வளர்ச்சியை காட்டுகிறது.

மோடி அரசு இந்த ஆண்டு ஜூலையில் அறி வித்த முழு பட்ஜெட்டில் வேலைவாய்ப்பு உருவாக்கம், நடுத்தர வர்க்கத்திற்கான திட்டங்கள் என்ற பெயரில் வரி விலக்குகள் அறிவித்தாலும், அவை பணவீக்கத்தை கட்டுப்படுத்தவோ, நுகர் வோர் செலவினத்தை ஊக்குவிக்கவோ போதுமானதாக இல்லை. உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ரூ.11.11 லட்சம் கோடி முதலீடு செய்யப்படும் என்ற அறிவிப்பும் வெற்று வாக்குறுதியாகவே உள்ளது.

வரும் 2025 ஆம் ஆண்டில் பணவீக்கம் மேலும் அதிகரிக்கும் என்பதே நிதி நிபுணர்களின் கணிப்பு. உணவுப் பொருட்களின் விலை உயர்வு தொடரும் நிலையில் ரிசர்வ் வங்கி வட்டி விகி தத்தை குறைக்க வாய்ப்பில்லை. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலால் ஏற்படக்கூடிய உலகளாவிய பொருளாதார அதிர்வுகளும் இந்தியப் பொருளாதாரத்தை பாதிக்கும்.

இந்த நிலையில் பணவீக்கத்தை கட்டுப்படுத் தவும், பொருளாதாரத்தை மீட்டெடு க்கவும் மக்கள் நலன் சார்ந்த மாற்று பொருளாதாரக் கொள்கைகள் அவசியமாகிறது. கார்ப்பரேட் ஆதரவு கொள் கைகளை கைவிட்டு, பொதுத்துறையை வலுப்படுத்தி, விவசாயம் மற்றும் சிறு தொழில்களை ஊக்குவிக்கும் கொள்கைகளை கொண்டு வருவதே இதற்கான தீர்வாக இருக்க முடியும்.

இவ்வாறு ‘தீக்கதிர்’ நாளேடு தனது குமுறலை வெளிப்படுத்தியுள்ளது.

செம்பாக்கம் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர்

# ஏ.கே.கருணாகரன் தாயார் லலிதா குப்புசாமி மறைவு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கழகத்தினர் அஞ்சலி!



காஞ்சிபுரம், டிச. 31

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் தாயாரும், 37 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மகாலட்சுமி கருணாகரனின் மாமியருமான லலிதா குப்புசாமி (வயது 78) அவர்கள் உடல்நிலை குறைவால் நேற்று (30.12.2024 திங்கட்கிழமை) இரவு 8 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

மறைவுச் செய்தி அறிந்ததும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, ஒன்றியக் கழக, வட்டக் கழக, கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு அன்னாரின் உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செய்கின்றனர்.

இவர்களுக்கு ஏ.கே.கருணாகரன், ஏ.கே.சந்தசேகர் என்கிற இரண்டு மகன் களும், ஹேமாமாலினி என்கிற ஒரே மகளும் உள்ளனர்.

அன்னாரின் உடல் அவர்களின் இல்லம் அமைந்துள்ள குரோம்பேட்டை நாரதபுரி தெருவில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படுகிறது. இறுதி ஊர்வலம் இன்று (31.12.2024 செவ்வாய்க்கிழமை) மாலை 3 மணியளவில், அஸ்தினாபுரம் இடுகாட்டில் நடைபெறுகிறது.

# சென்னை வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம் (03.01.2025-வெள்ளிக்கிழமை) அன்று மாலை 5.00 மணியளவில், இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் -துணைஅமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக அரசின் சாதனை விளக்கபொது கூட்டங்கள், பொங்கல் விழா, கழக ஆக்க பணிகள்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

திருத்தணி கிழக்கு ஒன்றிய கழக துணைச் செயலாளர்

# எம்.பாபு தந்தை முனிரத்தினம் மறைவு!

## திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ உள்பட கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்!



திருவள்ளூர், டிச 31-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி கிழக்கு ஒன்றியம் துணைச் செயலாளர் எம்.பாபு அவர்களின் தந்தை முனிரத்தினம் உடல் நலம் குறைவு காரணமாக நேற்று 30-12-2024 திங்கள் கிழமை 1.30 மணி அளவில் இயற்கை எழுதினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்

அன்னாரின் உடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, ஒன்றிய பொறுப்பாளர் கே.ராஜேந்திரன், உள்பட திருவள்ளூர் மேற்கு மாவட்டம் மற்றும் திருத்தணி கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் கழகத்தினர்கள் அஞ்சலி செலுத்தினார்கள்

அன்னாரின் இறுதி ஊர்வலம் 31.12.2024 இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணி அளவில் P-T புதூர் கார்த்திகேயபுரத்தில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் வட மாநில தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 17வது வட்டம் கன்னியம்மன் நகரில் நடைபெற்றது. தொழிலாளர்களுக்கு வேஷ்டி, சேலை, கோதுமை மாவு, மதிய உணவு ஆகியவற்றை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கினார். 17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், முன்னிலையில் சி. மூர்த்தி, சி. பாலாஜி, பி. மோகன், எஸ். சிவக்குமார், கே. சண்முகப்பிரியன் எம். என். அஜய் தென்னவன், மைக்கேல், செந்தில், கார்த்திக், சுதர்சன், பூபாலன், எம். என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.




திருவள்ளூர் மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனை கூட்டம் ஆவடியில் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் ஆலோசனைபடி மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் பெ.வினோத் தலைமையில் நடைபெற்றது இதில் மாநில வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் ஜெ.பச்சையப்பன் 2025 வழக்கறிஞர் அணி மாநாட்டில் பெருந்திரளாக கலந்து கொள்வது குறித்தும் வருகின்ற சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து வழக்கறிஞர் அணி உறுப்பினர் அதிக அளவில் சேர்ப்பது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் வழக்கறிஞர் அணி மாநில துணை செயலாளர் ரகு, நிர்வாகிகள் என்.பி.மாரிமுத்து, துரை பழனி, பி.கே.இ.நாகராஜ், பாஸ்.முருகன், பொன்.புனிதவராஜன், டேவீஸ் இளங்கோவன், கு.சேகர், சர்வேஸ்வரன், வெங்கடேசன், ஜெயக்குமார், வி.எம்.நாகதாஸ், ரமேஷ், ராஜ்குமார், பிராங்கிளின், இயேசு பாலன், கார்த்திக், அகஸ்டின், அத்திகிரி அருளானன், செல்வம், ரமேஷ், தேவராஜ், கனகராஜ், கிருஷ்ணதாஸ், கந்தன், தமிழ்செல்வன், நரேஷ்குமார், தமிழன்பன், லட்சம் பதி, நந்தகுமார், மோகன், வசந்தகுமார், செல்வம், ரகு, தினேஷ் பாபு, சந்தோஷ் குமார், பெருமாள், ரஜினி, ஜி.டி.அருண், பாஸ்கரன், ரவிச்சந்திரன், சரவணன், தினசிலன், சுந்தரம், கிருபா நிதி, கே.ஜி.அன்பு, ஜெயந்தி, தனலட்சுமி, ராதிகா, சாந்தகுமாரி, பூங்குழலி, ஹேமமாலினி பிரசன்னா, மதுக்குமார், அர்னால்டு, மேகநாதன், எஸ்.சந்தோஷ் குமார், அருள்குமார், பிரகாஷ், ஆனந்தன், பாலசந்தர், உள்பட பலர் கலந்து கொண்டார்கள்